<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

<u>S.C.No. 40/2022</u>

Deposition of witness for Prosecution/Defence/Court : <u>P.W.26</u>

<u>Accused present</u>

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி. திலகராணி | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 19th day of August, 2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுரை மாவட்டம் செக்காணூரணி காவல் நிலையத்தில் வட்டக்காவல் ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். நான் ஏற்கனவே சிவகாசி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, திருத்தங்கல் வட்ட காவல் ஆய்வாளர் திரு.முத்துப்பாண்டியன் அவர்கள் தற்செயல் விடுப்பில் சென்றதால் உத்தரவுப்படி திருத்தங்கல் வட்டக்காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது 08.11.2021ம் தேதி எம். புதுப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்த குற்ற எண் 166/2021 பிரிவு 302, 201 of IPC என்ற வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 9.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான எரிச்சநத்தம் – விருதுநகர் மெயின் ரோட்டில் உள்ள கோட்டையம்மன் கோவில் அருகில் உள்ள ஊரணி கரைக்கு சென்றேன். பின்னர் சம்பவ இடத்தை சாட்சிகள் முனிச்சாமி, அழகுராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த **மாதிரி வரைபடம் அசாஆ 13** ஆகும்.

பின்னர் சம்பவ இடத்தில் கிடந்த கொலையுண்டு இறந்த செல்வகணேஷ் என்பவரின் பாதி எரிந்த நிலையில் கிடந்த TN 67 BT 3135 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் சிடி 100 என்ற இருசக்கர வாகனத்தையும், மற்றும் TN 67 BT 3135 என்று எழுதப்பட்ட இருசக்கர வாகனத்தின் நம்பர் பிளேட்டையும், சம்பவ இடத்தில் இருந்து இரத்தம் பட்ட மண், மற்றும் இரத்தம் படாத மண் ஆகியவற்றையும், சம்பவ இடத்தில் கிடந்த இரத்தக்கறை படிந்த கல் ஒன்றையும், சம்பவ இடத்தில் இருந்த பெட்ரோல் வாடையுடன் கூடிய பாதி எரிந்த நிலையில் இருந்த அரைலிட்டர் பிளாஸ்டிக் வாட்டர் கேன் ஒன்றையும் அத்தாட்சி தயார் செய்து அத்தாட்சியின் பேரில் மேற்படி சாட்சிகள் அழகுராஜா, முனியசாமி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினேன்.

பின்னர் செல்வகணேசன் பிரேதத்தை விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை செய்யும்பொருட்டு அனுப்பிவைத்தேன். பின்னர் நான் விருதுநகர் அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் வைத்திருந்த செல்வகணேசனின் பிரேதத்தின் மீது 13.30 மணி முதல் 15.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். நான் தயார் செய்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 14** ஆகும்.

பின்னர் இறந்துபோன செல்வகணேசனின் இறப்பிற்கான உண்மையான காரணத்தை மருத்துவ ரீதியாக அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை வேண்டி, பிரேத பரிசோதனைக்காக மு.நி.கா. 3804 வினோத் என்பவரை நியமித்து அனுப்பிவைத்தேன்.

பின்னர் சாட்சிகள் நாகராஜ், முருகன், கற்பகவள்ளி, மோகன்ராஜ், சதீஸ்குமார், அழகுராஜா, முனியசாமி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து

வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 09.11.2021ம் தேதி திருத்தங்கல் வட்டக் காவல் ஆய்வாளர் முத்துப்பாண்டியன் அவர்கள் விடுப்பு முடிந்து அறிக்கை செய்ததால் வழக்கு கோப்பினை அவரிடம் தொடர் விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

அசாஆ 14 பிரேத விசாரணை அறிக்கையில் இறந்து போனதற்கான காரணம் என்ன என்ற முடிவுக்கு வருவதற்காக எந்த எந்த சாட்சிகளை விசாரித்தேன் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிடவில்லை. பொதுவாக பிரேத விசாரணை அறிக்கையில் பஞ்சாயத்தார் பெயர்களை மட்டும் தான் குறிப்பிடப்படுவது வழக்கம். அந்த சாட்சிகளின் வாக்குமூலங்களை பிரேத விசாரணை அறிக்கையுடன் இணைத்து அனுப்பவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் கல்லின் எடை, அதன் அளவு, அதன் ஒழுங்கு ஆகிய விபரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் அத்தாட்சியில் சொன்னது போன்று சம்பவ இடத்திலிருந்து எந்தவிதமான இரத்தக்கறை படிந்த கல்லையும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

பிரேத விசாரணை முடிந்த பின்னர்தான் நான் சாட்சிகளை விசாரித்தேன் என்றால் சரிதான். அவ்வாறு விசாரித்த சாட்சிகளில் எவரும் செல்வகணேஷ் இறந்ததற்கு காரணமாக யாரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பெண் பார்த்த வகையில் முன்விரோதம் என்று நான் விசாரித்த சாட்சிகள் என்னிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எல்லா சாட்சிகளும் எனது விசாரணையில் யாரோ மர்ம நபர்கள்

செல்வகணேசனை அடித்து கொலை செய்ததாக மட்டுமே சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான்.

அத்தாட்சி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான அழகுராஜா, முனியசாமி இருவரும் செல்வகணேசனின் ஊரான செங்குன்றாபுரத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம், அத்தாட்சி ஆகியவை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இறந்தவரின் ஊரைச்சேர்ந்தவர்களிடம் கையொப்பம் பெற்று வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

08.11.2021ம் தேதி நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை அதற்கு இரண்டு தினங்கள் கழித்து 10.11.2021ம் தேதி தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் என்றால் நான் 08.11.2021 அன்றே நீதிமன்ற காவலரிடம் ஒப்படைத்து விட்டேன்.

மறுவிசாரணை – இல்லை.